<u>அசல் வழக்கு எண்.19/2021</u>

**<u>தேதி: 08.07.2025.</u>**

**<u>வா.சா.1:</u> திரு. சீனிவாசன், த/பெ. பன்னீர்செல்வம்**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி-</u>**

நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் வியாபாரம் செய்கிறேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு தேவையான தகவல்களை நான் தான் என்னுடைய வழக்கறிஞரிடம் கூறினேன் என்றால் சரிதான், அதை வைத்து தான் அவர் இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் எப்போது போடப்பட்டது என்றால் 26.04.2017 அன்று போடப்பட்டது. எவ்வளவு தொகை முன்பணமாக கொடுக்கப்பட்டது என்றால் 20 லட்சம் ரூபாய். 10 லட்ச ரூபாய் ரொக்கமாகவும், 10 லட்ச ரூபாய் ஆன்லைன் மூலமாகவும் கொடுத்தேன்.

10 லட்சம் ரூபாய் ரொக்கமாக கொடுத்ததற்கு ஆவணங்கள் ஏதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனோ என்றால் கிரைய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது, அதை தவிர வேறு ஆவணம் எதுவும் என்னிடம் இல்லை. அன்றைய தேதியில் என்னிடம் 10 லட்சம் ரூபாய் ரொக்கமாக இருந்தது என்பதை நிரூபிக்க ஆவணங்கள் ஏதும் இல்லை என்றால், நான் வியாபாரி என்பதால் என்னிடம் ரொக்கமாக அவ்வளவு பணம் கையில் இருந்தது.

2016ஆம் வருடத்தின் வருமான வரி கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும், அதில் அந்த 10 லட்சம் ரூபாய் ஆன்லைன் பரிவர்த்தனையை காட்டியுள்ளேன் மற்றும் 10 லட்சம் ரூபாய் ரொக்கத்தையும் காட்டியுள்ளேன். கிரைய ஒப்பந்தத்தில் 3 மாத கால கெடு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அவர் தான் காலதாமதம் ஏற்படுத்தி

கிரையம் செய்து கொடுக்கவில்லை, பிரதிவாதிக்கு தவறான உள்நோக்கம் இருந்ததால் தான் கால தாமதம் ஏற்படுத்தினார்.

கிரைய ஒப்பந்தத்தை Execute செய்வதற்காக நான் வழக்கறிஞர் அறிவிப்பு மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ கேட்டேனா என்றால் பிரதிவாதியை பலமுறை நேரில் அணுகி கேட்டேன், நோட்டீஸ் கொடுத்தால் இன்னும் காலதாமதம் ஆகும் என பிரதிவாதி சொன்னதால் நோட்டீஸ் நான் கொடுக்கவில்லை. 31.05.2018 அன்று சந்திரசேகரன் என்பவருக்கு பிரதிவாதி செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

28.08.2018 அன்று சந்திரசேகர் என்பவர் பாண்டுரங்கன் என்பவருக்கு விற்பனை ஆவணம் செய்துக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான், பிரதிவாதி தான் சந்திரசேகர் என்பவர் பெயரில் தான செட்டில்மெண்ட் கொடுத்தார், சந்திரசேகர் என்பவர் பாண்டுரங்கன் என்பவருக்கு விற்பனை ஆவணம் எழுதிக் கொடுத்தார். இதை செய்வது எல்லாம் பிரதிவாதி தான், அவருடைய தம்பி பெயரில் செய்கிறார்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional District Judge,
Fast Track Court, Arani.